

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ம.தி.மு.க வேட்பாளர் தி.மு.ராஜேந்திரனை ஆதரித்து ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ சாம்பவர் வடகரையில் பிரச்சாரம் மேற்கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நிகழ்வில் தொகுதி பார்வையாளர் மாலைராஜா,நகர செயலாளர் வெங்கடேசன் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை தி.மு.க. வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பாளையம்பட்டி, கஞ்சம்பட்டி, வேல்முருகன் காலனி ஆகிய பகுதிகளில் மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார். உடன் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிவப்பிரகாசம், சுப்புராஜ், சாகுல் ஹமீது, அழகு இராமானுஜம், ஷியாம் வெங்கடேஷ், தங்கமணி, ஒன்றியச் செயலாளர் பாலகணேஷன், பொன்ராஜ், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் மாரிமுத்து இருந்தனர்.



சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஒன்றியம் ஏ.கணேசபுரம் அ.தி.மு.க. முன்னோடி வீ.வீரன், சிவக்குமார் ஆறுமுகம், சுப்பிரமணியன், பார்த்திபன், சின்ன கருப்பன் உட்பட 25க்கும் மேற்பட்டவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தனர். உடன் சிங்கம் புனரி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், துணை செயலாளர் எஸ்.முத்துகுமார் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பழனியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் என்.பாண்டி மற்றும் அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோருக்கு பிரமாண்டமான வரவேற்பளித்தனர். பழனியில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடும் சி.பி.எம். வேட்பாளர் என்.பாண்டியை ஆதரித்து உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த வாக்கு சேகரிப்பின் போது பழனி வடக்கு ரத வீதியில் பெரிய நாயகி அம்மன் கோவில் அருகில் ஊர் பொதுமக்கள் மற்றும் கூட்டணி கட்சியின் தலைவர்கள் சார்பாக பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சி.பி.எம். தலைவர்கள் மற்றும். தி.மு.க. நகரச்செயலாளர் வேலுமணி, நகர்மன்றத் தலைவர் உமாமகேஷ்வரி, இளைஞர் அணி செயலாளர் கணேசன், முருகானந்தன் (காங்), உள்ளிட்ட கூட்டணி கட்சியின் தலைவர்கள் பங்கேற்றனர்.



தென்காசி சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவன் இறுதி கட்ட பிரச்சாரத்தை தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் இருசக்கர வாகனத்தில் பல்வேறு பகுதிகளுக்கு கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள்,ஆகியோருடன் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார். தென்காசி கோவில் முன்பு மதியம் 130 மணி அளவில் நிறைபெற்ற நிகழ்வில் கழக சட்டத்துறை துணைச்செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான்,நகர செயலாளர் சாதிர் ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம் உள்பட கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தேர்தல் பரப்புரையின் இறுதிநாளான ஏப்ரல் 21 ஆம் தேதி தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி எம்பியும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி திருச்செந்தூர் தொகுதியில் தி.மு.க. வேட்பாளரான அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை ஆதரித்து பரப்புரை செய்தார்.



விருதுநகர் மாவட்டம், காரியாபட்டிப் பேரூராட்சிப் பகுதிகளான கரிசல்குளம், கே.செவல்பட்டி, பெரியார் நகர், யூனியன் ஆபிஸ் தெரு, அண்ணா நகர், ஜெகஜீவன்ராம் தெரு, முத்தாலம்மன் கோவில், பள்ளிவாசல் தெரு, காமராஜர் தெரு, முக்குரோடு, கள்ளிக்குடி சாலை என அனைத்துப் பகுதிகளிலும் தி.மு.க. வேட்பாளர் தங்கம் தென்னரசு வாக்குச் சேகரித்தார்.



மதுரை கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கிழக்கு தெற்கு ஒன்றிய பகுதிகளில் ஊர்வலமாக நடந்து சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாவட்ட பிரதிநிதி அழகுபாண்டி, ஒன்றிய செயலாளர் ஹக்கீம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.இளங்கோ, கழக நிர்வாகிகள் சீமான், கார்த்திக், மகேந்திரன், கூட்டணி கட்சி நிர்வாகிகள் நூர் முகமது, அரசமுத்துபாண்டி, பாலச்சந்திரன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரை வடக்கு தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க சென்றபோது மாநகர் மாவட்டக் கழக வழக்கறிஞர் அணி சார்பாக அமைப்பாளர் தேவசேனன் தலைமையில் வழக்கறிஞர்கள் முத்து சரவணகுமார், கிளாட்சன், தேவி ஸ்ரீ நாச்சியார், அப்துல் முத்தலில், ரஹீம் சிக்கந்தர் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் உற்சாக வரவேற்பு கொடுத்து பிரச்சாரத்தில் பங்கேற்றனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி விடுதலை சிறுத்தை கட்சி வேட்பாளர் சக்திவேலுக்கு பானை சின்னத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத் வாக்கு சேகரித்தார். உடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.